DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 250 of 2022 |
| Deposition of witness for | : | PW13 |
| Name | : | சரவணன் |
| Father's Name | : | A.V. தியாகராஜன் |
| Village | : | கள்ளக்குறிச்சி |
| Taluk | : | கள்ளக்குறிச்சி |
| District | : | கள்ளக்குறிச்சி |
| Profession | : | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 12th day of June 2025.

எதிரி ஆஜர். சாட்சி காணொளி காட்சி (Video Conference) Microsoft Teams மூலம் ஆஜர் ஆனார். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையிடம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பணிபுரிகிறேன். கடந்த 07.08.2020 அன்று கிருஷ்ணகிரி காவல் உட்கோட்டத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த போது, குருபரப்பள்ளி காவல் நிலைய குற்ற எண்.751/2020, சட்டப்பிரிவு 279,337, 304A இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.அருள்செல்வன் பதிவு செய்து, புலன் விசாரணைக்கு வேண்டி என்னுடைய பார்வைக்கு ஒரு நகலை வைத்தார். நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். சம்பவ இடத்திற்கு 07.08.2020 அன்று காலை 10.30 மணிக்கு சாட்சிகள் அடையாளம் காட்ட சம்பவ இடத்தை சாட்சிகள் 1.சரவணக்குமார், 2.ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் நான் தயார் செய்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்பு இந்த வாகன விபத்தில் இறந்து போன ஜமுனா மற்றும் வெங்கடேசன் ஆகியோர்களின் பிரேதங்கள் ஆம்புலன்ஸ் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சவக்கிடங்கில் இருப்பதாக தெரிந்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை சென்று இறந்து போன வெங்கடேசன், வயது 9 என்பவரின் பிரேதத்தை குருபரப்பள்ளி காவல் ஆய்வாளர் திரு.ரஜினி அவர்களை பிரேத விசாரணை மேற்கொள்ள அறிவுறுத்தினேன். நான் இறந்து போன ஜமுனா, வயது 36 என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். இதில் காயம்பட்ட இன்னொரு நபர் வேலன் என்கின்ற வேல்முருகன், வயது 11 என்று தெரிந்து கொண்டேன். பின்பு சாட்சிகள் 1.வெங்கடப்பன், 2.மது கந்தன், 3.முனியப்பா, 4.மணி, 5.மாதேஷ், 6.ஜெகதீஷ், 7.லட்சுமிபதி, 8.விஜய், 9.கவிதா, 10.கார்த்திக், 11.நாகேஷ், 12.சரவணக்குமார், 13.ராமமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இதில் மற்ற சாட்சிகளான 1.ராமு, 2.சீனிவாசன், 3.ஹரிஷ், 4.பாலாஜி, 5.ராஜ்குமார் ஆகியோர்களை குருபரப்பள்ளி காவல் ஆய்வாளர் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்திருந்தார். நான் அவர்களை மீண்டும் விசாரணை செய்தேன். அவரிடம் கூறிய படியே கூறியதால் நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அவர் பதிவு செய்த வாக்குமூலத்தை எடுத்துக் கொண்டேன். இதற்கிடையில் வேலன் என்கின்ற வேல்முருகன் பெங்களுரு Sparsh மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் போது, அங்குள்ள மருத்துவர்கள் 07.08.2020 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு வரும் வழியிலேயே இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். எனவே, வேண்டுகோள் கடிதம் கொடுத்து வேலன் என்பவரின் பிரேதத்தை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டது. பின்பு இறந்து போன வேல் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பின்பு பிரேத பரிசோதனைக்கு வேண்டி தனித்தனி வேண்டுகோள் கடிதம் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவருக்கு இறந்து போன மூன்று நபர்களின் உடல்களையும் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்பு இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279,337,304A இதச சட்டப்பிரிவுகளிலிருந்து 279, 304A இதச வாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். பின்பு 08.08.2020 அன்று காலை 10.00 மணிக்கு இந்த வழக்கின் எதிரி ஸ்ரீதர் என்பவர் காவல் நிலையத்தில் வந்து சரண்டர் ஆனார். அவரை காலை

10.15 மணிக்கு கைது செய்தேன். பின்பு அடைப்பு காவல் அறிக்கை தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு நீதித்துறை நடுவர் எண்.2, கிருஷ்ணகிரி அவர்களிடம் அனுப்பி வைத்தேன். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களான இறந்து போன ஜமுனா ஓட்டி வந்த வாகனம் TVS Scooty பதிவு எண்.TN 24 AC 3409 மற்றும் எதிரி ஓட்டி வந்த வாகனம் Eicher tempo வாகனத்தின் பதிவு எண்.TN 32 C 2476 என்ற வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் வட்டார போக்குவரத்து அலுவலகம், கிருஷ்ணகிரி அவர்களுக்கு வாகன தணிக்கை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். பின்பு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.சத்தியநாதன், அரசு மருத்துவர், அரசு மருத்துவமனை, கிருஷ்ணகிரி அவர்களிடம் பிரேத பரிசோதனை சான்றிதழ் பெற்றும், அவரை விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வாகன தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அன்புச்செழியன் அவரை விசாரித்து வாகன தணிக்கை சான்று பெற்றேன். பிரேத பரிசோதனைக்கு சென்ற காவலர்கள் சிராஜ், தலைமைக் காவலர் 941, காந்தி, முதுநிலை காவலர் 1486 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.அருட்செல்வன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் வெங்கடப்பன் கொடுத்த புகார் தான். அது **அ.சா.ஆ.6** ஆகவும், தற்போது என்னிடம் காட்டப்படும் ஜமுனா மற்றும் வேலன் என்கிற வேல்முருகன் ஆகியோரின் பிரேத விசாரணை அறிக்கை முறையே **அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8** ஆகவும், தற்போது என்னிடம் காட்டப்படும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நான் தயார் செய்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த ஆவணம் **அ.சா.ஆ.9** ஆகவும், விபத்தில் இறந்து போன ஜமுனா, வேலன் என்கின்ற வேல்முருகன், வெங்கடேசன் ஆகியோரின் பிரேத பரிசோதனை அறிக்கைகள் முறையே **அ.சா.ஆ.10, அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகின்றன. இந்த வழக்கில் என்னுடைய புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவு 279, 304A சட்டப்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

சம்பவம் நடந்த சாலை வடக்கு தெற்காக உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தில் ஈடுபட்ட ஈச்சர் வாகனம் கிருஷ்ணகிரியிலிருந்து வேப்பனப்பள்ளி நோக்கி சுமார் 6 டன் எடை கொண்ட போர்வெல் பைப்புடன் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான், டன் எவ்வளவு என்று சரியாக தெரியவில்லை. ஜமுனா ஓட்டி வந்த வாகனத்தில் மூன்று

பேர் பயணம் செய்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள், நடுவில் யார் அமர்ந்திருந்தது, கடைசியில் யார் அமர்ந்திருந்தது என்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் நடுவில் வெங்கடேசன், கடைசியில் வேலன் அமர்ந்திருந்தனர். ஈச்சர் வாகனத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் நான் போகும் போது யாருமில்லை, விசாரித்ததில் டிரைவர் மட்டும் இருந்ததாக தெரியவந்தது. ஜமுனாவுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் விசாரித்தேன், அதற்கான ஆவணங்கள் எதையும் ஒப்படைக்கவில்லை. ஜமுனா ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் அந்த சமயத்தில் அவர்களிடம் பதிவு சான்று எதுவும் இருந்ததாக தெரியவில்லை. நீங்கள் தயார் செய்த வரைபடத்தில் எதிரி ஓட்டிச் சென்ற ஈச்சர் லாரி சாலையின் இடது புறத்தில், வெள்ளைக்கோட்டிற்கு உள்ளே அடங்கி தான் சென்றது என்றால் சரியல்ல, விபத்தானது சாலையின் நடுப்பகுதியில் தான் நடந்தது, அதை மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன். 16.06.2020 அன்று ஜமுனாவின் கணவர் முருகேசன் என்பவர் ஒசூர், டைட்டன் கம்பெனியில் மின்சாரம் தாக்கி இறந்து விட்டிருந்தார் என்றால் புகாரில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளது, அது பற்றி தனியாக எதுவும் விசாரணை மேற்கொள்ளவில்லை. ஜமுனாவின் கணவர் முருகேசன் இறந்தது சம்பந்தமாக ஒசூர், துணை காவல் கண்காணிப்பாளர் ஜமுனாவை விசாரணைக்காக அழைத்ததன் பெயரில் தான் அவர்கள் சம்பவத்தின் போது ஒசூருக்கு சென்றார்கள் என்றால் புகார்தாரர் புகாரில் அப்படித்தான் சொல்லி உள்ளார், ஒசூரில் அது பற்றி விசாரிக்கவில்லை. விபத்து நடந்த இடம் சமமான பகுதி என்றால் சரியல்ல, வேப்பனப்பள்ளி பக்கம் மேடாகவும், கிருஷ்ணகிரி பக்கம் தாழ்வாகவும் இருக்கும். எதிரியின் வாகனமான ஈச்சர் வாகனம் மெதுவாக சென்றதாகவும், மேற்படி ஜமுனா அவர்கள் மிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், மூன்று பேருடன் விசாரணைக்கு செல்ல வேண்டி வேகமாக சென்று எதிரியின் வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எதிரி யாருடைய முன்னிலையில் காவல் நிலையத்தில் சரணடைந்தார் என்றால் என் முன்னிலையில் தான் சரணடைந்தார், அப்போது அவருடைய மாமா பிரதீப் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்தார். வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, ஜமுனா தான் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்ற அவசரத்தில் மூன்று பேருடன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று எதிரி ஓட்டி வந்த ஈச்சர் வாகனத்தின் மீது மோதி விபத்தை வரவழைத்துக் கொண்டார் என்றால் சரியல்ல. ஜமுனாவின்

குடும்பத்தார் இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக எதிரி மீது தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் விபத்தை நேரில் கண்டதாக சாட்சிகள் யாரும் கூறவில்லை என்றால் நேரில் பார்த்ததாக மூன்று பேர் சாட்சி சொல்லி உள்ளனர். சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், எதிரி மீது பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.